தேதி.18.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.134/2020 திருமதி.கண்ணம்மாள், க/பெ.சுப்பிரமணியன் வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதி ரூ.5,00,000/−ம் பணம் வாங்கியதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஐந்தாம்வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கொடுத்ததாக சொல்லும் நபரின் பெயர் என்னவென்றால் சம்பாள் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சம்பாள் என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பாள் என்பவரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 15 வருடமாகத் தெரியும். பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கரும்பு வெட்டும் கூலி வேலை செய்து வந்தார். பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் மூன்று குழந்தைகள் பெயர் தெரியாது. நான் பொய் சொல்கிறேன் என்றும், கரும்பு வெட்டும் கூலி வேலை பிரதிவாதி செய்ததாக சொல்லும் நிலையில் எத்தனை வருடங்களாக கரும்பு வெட்டும் கூலி வேலை செய்து வந்தார் என்றால் சுமார் 15 வருடங்களாக கூலிக்கு வேலை செய்து வந்தார். பிரதிவாதியின் கணவர் எப்போது இறந்தார் என்றால் இரண்டு வருடம் இருக்கும் ஞாபகம் இல்லை. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்றால் ஐந்து ஏக்கர் பூமி இருந்தது. தற்போது தோட்ட பூமி எனக்கு இல்லை என்றால் சரிதான்.

எப்போது விற்றேன் என்றால் சுமார் 7, 8 வருடங்கள் இருக்கும். என்ன விலைக்கு விற்றேன் என்றால் மொத்த தோட்டத்தையும் 45 லட்சத்திற்கு விற்றேன். பிரதிவாதிக்கு தினக்கூலி எவ்வளவு என்றால் வேலையைப்பொருத்து 500 அல்லது 1000 கொடுப்பேன். பிரதிவாதிக்கு எழுதப்படிக்க தெரியுமா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி சம்பாளை எனக்கு ஒன்பது ஆண்டுகளாக நன்கு தெரியும் என்று நான் எனது தாவாவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1ஐ யார் எழுதினார் என்றால் செந்தில் தான் எழுதினார். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் "அடித்தல்" யார் செய்தார்கள் என்றால் நான் குடும்ப செலவிற்கு என்று கேட்டதால் தான் அதை அடித்து எழுதினார்கள். வா.சா.ஆ.1ல் அடித்து எழுதப்பட்டுள்ளதில் வருடம் கீழே குறிப்பில் காட்டப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ல் 200_ என்ற உள்ள நிலையில் ஒரு பூஜ்ஜியத்தை அடித்து 2017 என்று ஏன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தங்கையின் கணவரான வேலுசாமி என்பவரிடம் பிரதிவாதி வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்ட கடனுறுதி சீட்டு ஆகும் என்றும், பிரதிவாதி பணத்தை திருப்பி கொடுத்த பின்னரும் அந்த கடனுறுதி சீட்டை திருப்பி கொடுக்காமல் அதை என்னிடம் கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஐந்து லட்ச ரூபாய்க்கு என்ன குடும்ப செலவு என்று கேட்டேனா என்றால் அதை நான் எதற்கு கேட்கவேண்டும் என்று நான் கேட்கவில்லை. பிரதிவாதிக்கு தோட்டம், காடு உள்ளதா என்றால் எதுவும் இல்லை வீடு உள்ளதாக சொன்னார். வா.சா.ஆ.1ல் ஐந்து லட்ச ரூபாய் கடனுக்கு கொடுத்த போது மாதம்

எவ்வளவு வட்டி என்று பேசிக்கொடுத்தேன் என்றால் ரூ.1/- வட்டி வைத்து கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் மாதம் என்ற வார்த்தை உள்ளதா என்றால் இல்லை. நான் பூமியை விற்பனை செய்து கையில் வைத்திருந்த பணத்தில் " என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பூமியை எந்த வருடம் விற்றேன் என்றால் இன்றிலிருந்து தோட்டம் விற்று பத்து வருடம் இருக்கும். 10.03.2016ம் தேதியில் தோட்டத்தை விற்றுள்ளேன் என்றால் சரிதான். 01.12.2017ம் தேதியில் நான் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் இடைப்பட்ட காலத்தில் தோட்டம்விற்ற தொகையை கையில் வைத்திருந்தேனா என்றால் என் குழந்தைகளுக்கு கொடுத்தது போக மீதம் பத்து லட்ச ரூபாய் கையில் வைத்திருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நான் கையில் வைத்திருந்த பணத்தை கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சீட்டு எடுத்த வகையில் பணம் வைத்திருந்ததாக சொல்லும் நிலையில் யாரிடம் சீட்டு எடுத்தேன் என்றால் எனக்கு தெரிந்த பக்கத்து வீட்டுக்காரர் பாப்பாள் என்பவரிடம் சீட்டு எடுத்தேன். பாப்பாள் என்பவரின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுடைய தோட்டம் பெயர் தெரியுமா என்றால் தோட்டம் இல்லை. பாப்பாள் என்பவருக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் ஒரு மகள், ஒரு மகன் உள்ளார். தற்போது அவர்கள் என்ன செய்து வருகிறார்கள் என்றால் அவர்கள் சிறு குழந்தையாக இருந்தபோது சீட்டு போட்டது. எத்தனை ரூபாய் சீட்டு போட்டேன் என்றால் இரண்டு லட்சம் சீட்டு இரண்டு போட்டேன். அந்த சீட்டு போட்ட நபர்கள் தற்போது இருக்கிறார்களா என்றால் காலமாகிவிட்டார். அவரின் குழந்தைகள் உள்ளார்கள்.

அவர்களின் முகவரி என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் சீட்டு போட்டேன் என்றால் நினைவில் இல்லை. பிரதிவாதி என்னிடம் எந்த வருடம் எந்த மாதம் பணம் கேட்டார் என்றால் 2017 வருடத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் என்னிடம் பணம் கேட்டார். கேட்டவுடன் நான் பணத்தை கொடுக்கவில்லை என்றும், ஒரு வருடம் கழித்து தான் கொடுத்தேன் என்றால் அவர் கேட்டுக்கொண்டே தான் இருந்தார் நான் 2017ம் வருடம் கடன் கொடுத்தேன். வா.சா.ஆ.2ல் " கீழ்கண்ட சொத்தை எங்கள் குடும்ப செலவுக்காகவும், முன்கடன், வங்கி கடன் தீர்க்கவும், வசதியான வேறு பூமி வாங்கும் செலவுக்காவும் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் ஒரு வருடமாக தொடர்ந்து கடன் கேட்டதாக நான் சொல்லும் நிலையில் எப்போது யாருடன் வந்து கடன் கேட்டார் என்றால் அவர் தனியாக வந்து தான் கேட்டார். பிரதிவாதி என்னிடம் ஒரு வருடமாக தொடர்ந்து கடன் கேட்டபோது என் வீட்டில் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான் தனியாக தான் இருந்தேன். பிரதிவாதி என்னிடம் பணம் கேட்பதாக எனது குழந்தைகளிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எத்தனை நாட்களில் பணத்தை திருப்பி கொடுப்பதாக பிரதிவாதி சொன்னார் என்றால் தான் வீடு விற்று கொடுப்பதாகவும், அது வரை வட்டி வாங்கிகொள்ளுமாறு கூறினார். எத்தனை தவணை வட்டி பிரதிவாதி கொடுத்தார் என்றால் பிரதிவாதி ஒரு தவணை கூட வட்டி கொடுக்கவில்லை. எத்தனை முறை சென்று பிரதிவாதியிடம் வட்டிப்பணம் கேட்டேன் என்றால் நான் சுமார் 10, 20 முறை சென்று கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். அப்போது உடன்

யாரையேனும் அழைத்து சென்றேனா என்றால் இல்லை நான் தனியாக தான் சென்றேன். ஊர் பெரியவர்களிடம் சொல்லி பிரதிவாதி எனக்கு பணம் தரவேண்டும் என்று கூறினேனா என்றால் இல்லை. எனது மகனிடம் பிரதிவாதி எனக்கு பணம் தரவேண்டும் என்று கூறினேனா என்றால் இல்லை. நான் வட்டித்தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. இதற்கு முன்னர் நான் பிரதிவாதிக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தாசம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சுய உதவிக்குழுவில் கடன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் முதியோர் உதவித்தொகை வாங்கி வருகிறேனா என்றால் கடந்த மூன்று மாதங்களாகத்தான் பெற்று வருகிறேன். வேலுச்சாமி எனக்கு என்ன முறை என்றால் எனது தங்கையின் கணவர் அவருடன் கடந்த 15 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் ஐந்தாவது பக்கத்தில் " வேலுச்சாமி குடும்பத்திடம் கருத்துவேறுபாடு ஏற்பட்டு அச்சமயத்திலிருந்து வேலுச்சாமி குடும்பத்தாருக்கும் " என்று சொல்லியுள்ள நிலையில் என்ன கருத்துவேறுபாடு என்றால் தோட்டத்தை வேலுச்சாமிக்கு தெரிந்தவருக்கு விற்பனை செய்யவில்லை என்பதால் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. அதற்கு முன்னரே எனக்கும் எனது சகோதரிகளுக்கும் பிரச்சனை இருந்ததால் பேச்சுவார்த்தை இல்லை. வேலுச்சாமியின் குடும்பத்தாருக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். தோட்டத்தை விற்கும்போது வா.சா.ஆ.2ல் வேலுச்சாமியின் மகன் சஞ்சு என்பவர் தான் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். தோட்டம் விற்ற பின்னர் தான் எங்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டது.

தாவாவில் " வாதியின் இல்லத்தில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் ஐந்து லட்சம் ரொக்கம் கொடுத்ததாக " சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனுறுதி சீட்டு சாட்சிகள் முன்னிலையில் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாவில் நான் சாட்சிகள் என்று சொல்லியுள்ள நிலையில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் ஒரு சாட்சியம் தான் உள்ளது என்றால் சரிதான். பணம் கொடுக்கும் போது பிரதிவாதி தான் செந்திலை உடன் அழைத்து வந்தார். பிரதிவாதியும் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் அதை நான் சொல்லமாட்டேன். எனக்கு அவர் சமூகத்தை பற்றி எனக்கு தெரியாது. செந்தில் குமார் எனக்கு உறவினரா என்றால் உறவினர் தான். நான் பொய் சொல்கிறேன் என்றும், எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றால் சரியல்ல. எனது தங்கை கணவருடைய சித்தப்பா மகன் தான் செந்தில்குமார் என்றால் சரிதான். பிரதிவாதி அழைத்து வந்தபோது தான் எனக்கு தெரியும். என்னுடைய அலைபேசி எண் என்னவென்றால் பார்த்தால் தான் சொல்லமுடியும். வா.சா.ஆ.2ல் என்னுடைய அலைபேசி எண் 96295 56017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது நான் இந்த அலைபேசி எண்ணை பயன்படுத்துவது இல்லை. வேறு எண் தான் பயன்படுத்தி வருகிறேன் அந்த எண் என்னவென்று பார்த்தால் தான் சொல்லமுடியும். வா.சா.ஆ.2ல் உள்ள 95781 66005 என்ற எண் எனது மகனுடையதா என்றால் அவர் இரண்டு மூன்று எண் வைத்துள்ளார் அதனால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2ல் உள்ள 70083 61844 என்ற எண் எனது மகளுடையதா என்றால் அவர் இரண்டு மூன்று எண் வைத்துள்ளார் அதனால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன

எண்ணிலிருந்து என் தங்கை பூங்கொடியிடம் யாரும் பேசுவது இல்லை என்றால் சரிதான். வேலுச்சாமி மற்றும் அவரது மனைவி பூங்கொடி மற்றும் மகன் சஞ்சு ஆகியோர்களின் அலைபேசி எண்ணின் அழைப்பாளர் பட்டியலை எடுத்துப்பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. கடனுறுதி சீட்டு எழுதிய பின்னர் பிரதிவாதிக்கு படித்துகாண்பிக்கப்பட்டதா என்றால் படித்து காண்பிக்கப்பட்டது. மேற்சொன்ன விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் உள்ள முகவரியை யார் சொன்னார்கள் என்றால் பிரதிவாதி தான் கூறினார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், நானாகத்தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாத நிலையில் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் " கடனுறுதி சீட்டை பிரதிவாதி பார்வையிட்டு " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐந்து லட்ச ரூபாயை நான் பிரதிவாதிக்கு எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் தாசம்பாளையத்தில் உள்ள எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். தாசம்பாளையத்தில் நான் தனியாக உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் கெம்பநாயக்கன் பாளையம் ஸ்டேட் பேங்க்கில் உள்ளது. எத்தனை வருடங்களாக வங்கி கணக்கு உள்ளது என்றால் 20 வருடமாக வைத்துள்ளேன். தோட்டத்தை விற்ற பணத்தை வங்கி கணக்கில் வைக்கவில்லையா என்றால் போட்டு வைத்திருந்தேன் பின்னர் எனது பிள்ளைகளுக்கு கொடுத்துவிட்டேன். மேற்படி வங்கி கணக்கின் கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பிரதிவாதி நான் தான் கடனுறுதி சீட்டை எழுதி கொடுக்க வேண்டும் என்று

சொன்னேன் என்றும், பிரதிவாதியின் வீட்டின் பட்டா நகலை கேட்டேன் என்றால் சரிதான். பட்டாவில் அசல் எங்குள்ளது என்று நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. பிரதிவாதியிடம் ஐந்து லட்சம் கொடுத்தால் திருப்பி வருமா என்று நான் வேறு யாரேனும் விசாரித்தேனா என்றால் இல்லை. 2017ம் வருடம் நவம்பர் மாதம் இரண்டாவது வாரம் கடன் கேட்டதாகவும் அதற்கு 01.12.2017ம் வருடம் கடன் கொடுத்ததாக சொல்லும் நிலையில் இடைப்பட் டநிலையில் பட்டாவின் அசலை நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி கொடுத்த பட்டாவின் நகலானது உண்மையானதா அல்லது பொய்யானதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் கொடுத்த ஐந்து லட்ச ரூபாய் பணத்தை யார் எண்ணி பார்த்தார்கள் என்றால் பிரதிவாதியே எண்ணிப்பார்த்தார். முழுப்பணத்தையும் ஒவ்வொரு தாளாக பிரதிவாதி தான் எண்ணிப்பார்த்தார் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு பிரதிவாதி வந்தார் என்றால் காலை 9.00 க்கு பிரதிவாதியும் செந்தில்குமாரும் வந்தார்கள். இரண்டு பேரும் காரில் வந்தார்களா என்றால் வீட்டிற்குள் இருந்ததால் தெரியாது. நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், வேலுச்சாமிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் கீழ் உள்ள கையெழுத்து வேறு என்றும், கடனுறதி சீட்டை பூர்த்தி செய்த கையெழுத்து வேறு என்றால் சரியல்ல. செந்தில்குமார் தான் பூர்த்தி செய்தார். செந்தில் குமார் என்னுடைய உறவினர் என்பதால் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேலுச்சாமியின் வீட்டில் பிரதிவாதி வேலைக்கு சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பேச்சு வார்த்தை இருந்தபோது பிரதிவாதி வேலைக்கு சென்று கொண்டிருந்தது தெரியும் அதன் பின்னர்

தெரியாது. வேலுச்சாமியின் மீது பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் துறையினர் அழைத்து விசாரித்ததில் காவல் நிலையத்திற்கு வெளியே பைசூல் செய்து கொள்வதாக சொல்லி பின்னர் பாட்டாளி மக்கள் கட்சியினர் முன்னிலையில் சமரசம் பேசி அசல் பட்டாவை பிரதிவாதி திரும்ப பெற்றுக்கொண்டார் என்றும், ஆனால் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டை கையில் வைத்துக்கொண்டு தீயில் எறித்துவிட்டதாக கூறிவிட்டு தற்போது மேற்படி கடனுறுதி சீட்டை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பணம் சம்பந்தமாக எனது மகள், மகனை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இந்த பணம் சம்பந்தமாக எனது குழந்தைகளுக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனது குழந்தைகளுக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.